**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**அனுப்புநர்**

திருமதி.கா. ரங்கநாயகி
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர் -641 001

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்
மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

மாண்புமிகு பாராளுமன்ற
உறுப்பினர்கள்,
(கோயம்புத்தூர் மற்றும்
பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

மாண்புமிகு சட்டமன்ற
உறுப்பினர்கள்,
(கவுண்டம்பாளையம்,
கோயம்புத்தூர் வடக்கு,
தொண்டாமுத்தூர்,
கோயம்புத்தூர் தெற்கு,
சிங்காநல்லூர் மற்றும்
கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்).

**திருவள்ளுவர் ஆண்டு 2057 / பராபவ வருடம் / புரட்டாசி மாதம்**

**ந.க.எண் : 5289/2026 / எம்சி.8 நாள் 08.10.2026**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்றக் கூட்டம் நடைபெறுதல் - தகவல் தெரிவித்தல் - தொடர்பாக.

---

கோயம்புத்தூர் மாநகராட்சியில் மாமன்ற அவசரக் கூட்டம், திருவள்ளுவர் ஆண்டு 2057 / பராபவ வருடம் / புரட்டாசி மாதம் 26 ஆம் நாள் **(13.10.2026) செவ்வாய் கிழமை காலை 10.30 மணிக்கு** மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் உள்ள விக்டோரியா ஹால் கூட்ட அரங்கில் மாண்புமிகு மேயர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.

மேற்படி கூட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு - கூட்டப்பொருள்கள்

(ஒப்பம்) கா.ரங்கநாயகி
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

**நகல் :**

துணை ஆணையாளர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் , கோயம்புத்தூர் மாநகராட்சி

| மாமன்றக் கூட்டம் | | |
|---|---|---|
| நிகழ்ச்சி நிரல் | | பக்கம் எண் |
| அ) தமிழ்த்தாய் வாழ்த்து<br>ஆ) திருக்குறள் வாசித்தல்<br>இ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | | 1 |
| வ.எண் | பொருளடக்கம் | |
| 1 | பொறியியல் பிரிவு - வடவள்ளி. வீரகேரளம். கவுண்டம்பாளையம் மற்றும் துடியலூர் பகுதிகளுக்கு பாதாளசாக்கடை திட்டம் செயல்படுத்துதல் - TNUIFSL நிதி உதவி மூலம் TNUDF-லிருந்து கடன் பெறுதல் - இத்திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட கடனில், இதுவரை பெறப்படாத மீதமுள்ள தொகையைப் பெறுதல் – கால நீட்டிப்பு செய்தல் – மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக. | 2 |
| 2 | பொறியியல் பிரிவு - வடவள்ளி. வீரகேரளம். கவுண்டம்பாளையம் மற்றும் துடியலூர் பகுதிகளுக்கு பாதாளசாக்கடை திட்டம் செயல்படுத்துதல் - TNUIFSL நிதி உதவி மூலம் PSGF-லிருந்து மானியம் பெறுதல் -இத்திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட கடனில், இதுவரை பெறப்படாத மீதமுள்ள தொகையைப் பெறுதல் – கால நீட்டிப்பு செய்தல் – மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக. | 2 |
| 3 | பொறியியல் பிரிவு – வடக்கு மண்டலம் – வார்டு எண் – 19 & 30 க்குட்பட்ட பாலமுருகன் நகர் முதல் கணேஷ் லே அவுட் வரை உள்ள கால்வாய்க்கு தடுப்புச்சுவர் கட்டுதல் பணி மேற்கொள்ளுதல் – ரூ. 150.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகை - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக.. | 3 |
| 4 | பொறியியல் பிரிவு – வடக்கு மண்டலம் – வார்டு எண் – 19 க்குட்பட்ட மணியகாரன்பாளையம் பிரதான சாலையில் பூசாரிபாளையம் முதல் சுவாக தேவ் சந்திப்பு வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் திரும்ப கட்டுதல் பணி மேற்கொள்ளுதல் – ரூ. 46.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகை - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக.. | 4 |
| 5 | நகரமைப்பு பிரிவு - கோவை வடக்கு வட்டம், மேற்கு மண்டலம், தெலுங்குபாளையம் கிராமம் - சீரநாயக்கன்பாளையம் பகுதியில் அமைந்துள்ள 102 குடியிருப்பு கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகளை இடித்து அகற்றி மறு கட்டுமானம் மேற்கொள்ளுதல் – மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக.. | 4 |
| 6 | பொது சுகாதாரப்பிரிவு – கோவிட் 19 பெருந்தொற்று காலத்தில் நவம்பர் 2021 மாதம் – 18868 RTPCR மாதிரிகள் (RTPCR Samples) Orbito Asia Diagnostics என்ற நிறுவனத்திற்கு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் அனுப்பப்பட்டது – பரிசோதனைக்கான தொகை வழங்குதல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 5 |
| 7 | பொறியியல் பிரிவு – தெற்கு மண்டலம் - வார்டு எண்.88 - ஆழ்துளை கிணறு 10 மாதங்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ளுதல் – ஒப்பந்ததாரர் கோப்பு இரத்து செய்தல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 6 |
| 8 | பொறியியல் பிரிவு – மத்திய மண்டலம் – 2 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 7 |
| 9 | பொறியியல் பிரிவு – மத்திய மண்டலம் – 2 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 8 |
| 10 | பொறியியல் பிரிவு – தெற்கு மண்டலம் - வார்டு எண்.98 - ஆழ்துளை கிணறு ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ளுதல் – ஒப்பந்ததாரர் கோப்பு இரத்து செய்தல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 9 |
| 11 | பொறியியல் பிரிவு – தெற்கு மண்டலம் - வார்டு எண்.94 - ஆழ்துளை கிணறு ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ளுதல் – ஒப்பந்ததாரர் கோப்பு இரத்து செய்தல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 9 |
| 12 | பொறியியல் பிரிவு – தெற்கு மண்டலம் - வார்டு பகுதிகளில் பழுதடைந்துள்ள தார்சாலைகளுக்கு தார்தளம் ஒட்டு போடுதல் பணி மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் – மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 10 |
| 13 | நகரமைப்பு பிரிவு - தெற்கு மண்டலம், குறிச்சி கிராமம், புல எண். 188/2- ல் 0.45.42 ஹெக்டேர் பரப்பளவு இடம் - அரசு நிறுவனமான தமிழ்நாடு சிறு தொழில்கள் மேம்பாட்டு கழகத்திற்கு பட்டா மாறுதல் செய்ய மாநகராட்சிக்கு ஆட்சேபனை இல்லை என தடையின்மை சான்று வழங்குதல் – மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 11 |

| | | |
|---|---|---|
| 14 | பொறியியல் பிரிவு – தெற்கு மண்டலம், வெள்ளலூர் உரக்கிடங்கு வளாகத்தில் **184 எண்ணிக்கையில் தொட்டிகள்** கொண்ட மண்புழு உரம் மையம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் – மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 11 |
| 15 | பொறியியல் பிரிவு – மேற்கு மண்டலம் - வார்டு எண்: 75 –ஜீவானந்தம் வீதி, திலகர் வீதி மெயின் ரோடு மற்றும் நேரு வீதி பகுதிகளில் உள்ள மழை நீர் வடிகால் மற்றும் சிறுபாலம் திரும்ப கட்டுதல் பணி மேற்கொள்ளுதல் – மதிப்பீட்டுத் தொகை – **ரூ. 50,00,000/-**மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 12 |
| 16 | பொறியியல் பிரிவு – மேற்கு மண்டலம் - வார்டு எண்: 75 –திலகர் வீதி ஒன்று முதல் திலகர் வீதி மூன்று வரை ஆகிய பகுதிகளில் உள்ள மழை நீர் வடிகால் மற்றும் சிறுபாலம் திரும்ப கட்டுதல் பணி மேற்கொள்ளுதல் – மதிப்பீட்டுத் தொகை – **ரூ. 50,00,000/-**மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 12 |
| 17 | பொறியியல் பிரிவு – வடக்கு மண்டலம் – 2 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 12 |
| 18 | பொறியியல் பிரிவு – மேற்கு மண்டலம் - வார்டு எண்: 75 –என்.ஜி.ஆர் வீதி, Dr.ராதாகிருஷ்ணன் வீதி ஆகிய பகுதிகளில் உள்ள மழை நீர் வடிகால் மற்றும் சிறுபாலம் திரும்ப கட்டுதல் பணி மேற்கொள்ளுதல் – மதிப்பீட்டுத் தொகை – **ரூ. 50,00,000/-**மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 13 |
| 19 | பொறியியல் பிரிவு – தெற்கு மண்டலம் - வார்டு எண்.77-க்குட்பட்ட பகுதியில் நகர்புற நல வாழ்வு மையத்திற்கு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு – 15.00% வரை மதிப்பீட்டை விட குறைவாக பெறப்பட்டுள்ளதால் - கூடுதல் காப்புத்தொகை செலுத்தாத பட்சத்தில் பணியினை ரத்து செய்து, மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும்-– மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 13 |
| 20 | பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம் – தார் ஒட்டு போடுதல் -ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு- கூடுதல் காப்புத்தொகை செலுத்தாத பட்சத்தில் பணியினை ரத்து செய்து, மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் –- மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 14 |
| 21 | பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம் –2 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - பணி ஆணை வழங்கியதற்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 15 |
| 22 | பொறியியல் பிரிவு – கிழக்கு மண்டலம் – 23 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 16 |
| 23 | பொறியியல் பிரிவு – மத்திய மண்டலம் - 21 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 22 |
| 24 | பொறியியல் பிரிவு – வடக்கு மண்டலம் – 22 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 30 |
| 25 | பொறியியல் பிரிவு – வடக்கு மண்டலம்- – 16 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 38 |
| 26 | பொறியியல் பிரிவு – வடக்கு மண்டலம்- – 16 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 43 |
| 27 | பொறியியல் பிரிவு – மத்திய மண்டலம் – 3 பணிகளுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை காலநீட்டிப்பு - மதிப்பீடு ரூ.16.00 லட்சத்திற்கு ஒப்புதல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 47 |
| 28 | பொறியியல் பிரிவு – மத்திய மண்டலம் – மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் கலையரங்கம் அமைத்தல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் –- மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 48 |
| 29 | வருவாய் பிரிவு – மத்திய மண்டலம் – 2026-2029-ம் ஆண்டிற்கான வருடாந்திர குத்தகை இனங்கள் – மறு ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது – உரிமம் ஒப்படை செய்தல் - மாமன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக. | 49 |

| | | |
|---|---|---|
| 30 | வருவாய் பிரிவு – மத்திய மண்டலம் – 2025-26 முதல் 2026-27-ம் ஆண்டிற்கான மாதந்திர வாடகை இனங்கள் – 20.11.2025 மற்றும் 21.11.2025 ஆகிய தேதிகளில் மறு பொது ஏலம் / மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது – உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கை ஏற்று ஒப்படைப்பு செய்வது - மாமன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக. | 51 |
| 31 | வருவாய் பிரிவு – மத்திய மண்டலம் – 2026-2029-ம் ஆண்டிற்கான வருடாந்திர குத்தகை இனங்கள் – மறு ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளுவது - மாமன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக. | 54 |
| 32 | வருவாய் பிரிவு – மத்திய மண்டலம் – செம்மொழி பூங்கா ஏலம் போகாத குத்தகை / உரிம இனங்கள் – 30.12.2025, 27.01.2026, 06.02.2026 மற்றும் 25.02.2026 ஆகிய தேதிகளில் பொது ஏலம் / மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படைப்பது செய்வது மற்றும் ஏலம் கோரப்படாத இனங்களுக்கு பொது ஏலம் நடத்துதல் - மாமன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக. | 55 |
| 33 | பொறியியல் பிரிவு – மத்திய மண்டலம்- நுண்ணுயிர் உரக்கூடம் மற்றும் பொருள் மீட்பு மையத்திற்கு கூடுதல் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல் – தொடர்பாக. | 57 |
| 34 | பொறியியல் பிரிவு – மத்திய மண்டலம்- 14 பள்ளிகளுக்கு 12 மாத கால பராமரிப்பு மற்றும் தூய்மைப் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் – மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல் – தொடர்பாக. | 58 |
| 35 | நகரமைப்பு பிரிவு -மேற்கு மண்டலம்-வீரகேரளம் கிராமம்- மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் – மாவட்ட நகர் ஊரமைப்பு துறையினால் மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதற்கு பின்னேற்பு வேண்டி - மாமன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக. | 59 |
| 36 | பொறியியல் பிரிவு-கிழக்கு மண்டலம் - 15 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 59 |
| 37 | பொறியியல் பிரிவு-வடக்கு மண்டலம்-5 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 66 |
| 38 | பொறியியல் பிரிவு-கிழக்கு மண்டலம்-12 ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு இயக்கி பராமரித்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 68 |
| 39 | பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம் - 9 கழிவுநீர் உந்து நிலையத்தை ஓராண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் – மன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல்– தொடர்பாக | 71 |
| 40 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - 3 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 72 |
| 41 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - 30 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 73 |
| 42 | பொறியியல் பிரிவு – மத்திய மண்டலம் – தெரு விளக்குகளை மூன்று ஆண்டுகளுக்கு பராமரித்தல் – மதிப்பீடு ரூ.738.00/- இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக | 83 |
| 43 | பொறியியல் பிரிவு – தெற்கு மண்டலம் – தெரு விளக்குகளை மூன்று ஆண்டுகளுக்கு பராமரித்தல் – மதிப்பீடு ரூ.705.00/- இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக | 84 |
| 44 | பொறியியல் பிரிவு – வடக்கு மண்டலம் – தெரு விளக்குகளை மூன்று ஆண்டுகளுக்கு பராமரித்தல் – மதிப்பீடு ரூ.733.00/- இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல் – தொடர்பாக | 84 |
| 45 | பொறியியல் பிரிவு – மேற்கு மண்டலம் – தெரு விளக்குகளை மூன்று ஆண்டுகளுக்கு பராமரித்தல் – மதிப்பீடு ரூ.746.00/- இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல் – தொடர்பாக | 85 |

| | | |
|---|---|---|
| 46 | பொறியியல் பிரிவு – கிழக்கு மண்டலம் – தெரு விளக்குகளை மூன்று ஆண்டுகளுக்கு பராமரித்தல் – மதிப்பீடு ரூ.814.00/- இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக | 85 |
| 47 | பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம்- 3 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 86 |
| 48 | பொது சுகாதாரப்பிரிவு – 5 மண்டலம் (100 வார்டு பகுதிகள்) – கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் – ஒப்பந்த அடிப்படையில் 1209 DBC பணியாளர்கள் – பணியமர்த்த நிர்வாக அனுமதி கோருதல் – தொடர்பாக | 87 |
| 49 | பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம்- 4 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 88 |
| 50 | பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம்- வார்டு எண்.83-க்குட்பட்ட வ உ சி பூங்கா மற்றும் விளையாட்டு மைதானத்தின் பக்கவாட்டு சாலை பகுதியில் கூடுதல் ஆரோக்கியமான மற்றும் சுகாதாரமான உணவு தெரு கடைகளை மேம்படுத்துதல் - மதிப்பீடு தொகை ரூ.84,00,000/- க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல் – தொடர்பாக | 89 |
| 51 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் – வார்டு எண்.60க்குட்பட்ட வரதராஜபுரம் பகுதியில் பொதுவான சமையலறை அமைக்க ஜெ.ஜெ கல்யாண மண்டபத்தை மராமத்து பணி செய்தல்- ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 89 |
| 52 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் – வார்டு எண் 15-க்குட்பட்ட சுப்பிரமணியம்பாளையம் பெரியார் நகர் உள்ள பொதுக் கழிப்பிடத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 90 |
| 53 | பொறியியல் பிரிவு – மேற்கு மண்டலம்-2 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 90 |
| 54 | பொறியியல் பிரிவு – ஐந்து மண்டலம் – பாதாள சாக்கடை அடைப்புகளை நீக்கும் பணிகளுக்கு 5 எண்ணிக்கையிலான – புதிய இலகுரக கழிவு நீர் அடைப்பு நீக்கும் (Vehicle Mounted Mini-Jetting Machine 1000Ltr) இயந்திரம் பொருந்திய வாகனம் கொள்முதல் செய்தல் – மன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல் – தொடர்பாக | 92 |
| 55 | பொறியியல் பிரிவு – தெற்கு மற்றும் மேற்கு மண்டலம் – 2 எண்ணிக்கையிலான திறந்த கால்வாய்களை தூர்வாரும் இயந்திரம் பொருந்திய வாகனங்கள் (Open Nalla Desilting Machine) கொள்முதல் செய்தல் – மன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல் – தொடர்பாக | 92 |
| 56 | பொறியியல் பிரிவு – கிழக்கு மற்றும் வடக்கு மண்டலம் – 2 எண்ணிக்கையிலான திறந்த கால்வாய்களை தூர்வாரும் இயந்திரம் பொருந்திய வாகனங்கள் (Open Nalla Desilting Machine) கொள்முதல் செய்தல் – மன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல் – தொடர்பாக | 93 |
| 57 | வருவாய் பிரிவு – வடக்கு மண்டலம் – வார்டு பகுதிகளில் - 2026-2027-ம் நிதியாண்டில் நிலுவை சொத்துவரி மற்றும் வரியில்லா இனங்களில் கடை வாடகை ஆகிய பணிகளுக்கு நோட்டஸ் சார்வு செய்தல் மற்றும் அலைபேசி மூலம் நிலுவைத்தொகை செலுத்த கோரி நினைவூட்டுதல் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு மூலம் தற்காலிக பணியாளர்களை பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ளதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 93 |
| 58 | வருவாய் பிரிவு – மேற்கு மண்டலம் – வார்டு பகுதிகளில் - 2026-2027-ம் நிதியாண்டில் நிலுவை சொத்துவரி மற்றும் வரியில்லா இனங்களில் கடை வாடகை ஆகிய பணிகளுக்கு நோட்டஸ் சார்வு செய்தல் மற்றும் அலைபேசி மூலம் நிலுவைத்தொகை செலுத்த கோரி நினைவூட்டுதல் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு மூலம் தற்காலிக பணியாளர்களை பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ளதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 95 |

| | | |
|---|---|---|
| 59 | வருவாய் பிரிவு – மத்திய மண்டலம் – வார்டு பகுதிகளில் - 2026-2027-ம் நிதியாண்டில் நிலுவை சொத்துவரி மற்றும் வரியில்லா இனங்களில் கடை வாடகை ஆகிய பணிகளுக்கு நோட்டஸ் சார்வு செய்தல் மற்றும் அலைபேசி மூலம் நிலுவைத்தொகை செலுத்த கோரி நினைவூட்டுதல் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு மூலம் தற்காலிக பணியாளர்களை பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ளதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 96 |
| 60 | பொறியியல் பிரிவு – ஐந்து மண்டலத்திற்குட்பட்ட 15 எண்ணிக்கையிலான மாநகராட்சி நடுநிலைப்பள்ளிகளுக்கு மெய்நிகர் ஆய்வகம் (AR/VR Lab) அமைத்தல் - மன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல் – தொடர்பாக | 98 |
| 61 | கல்வி பிரிவு– மாநகராட்சி பணியாளர்களின் குழந்தைகளுக்காக மாநகராட்சி வளாகத்தில் Day Care Centre அமைத்து செயல்படுத்துதல் – பல்வேறு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட முன்மொழிவுகள் – ஒப்பீட்டு அறிக்கை – குறைந்த மதிப்பீட்டில் முன்மொழிவு சமர்ப்பித்துள்ள நிறுவனத்தைத் தேர்வு செய்தல் – மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 99 |
| 62 | பொறியியல் பிரிவு - கிழக்கு, மேற்கு மற்றும் மத்திய மண்டலம் - மாநகராட்சி பள்ளிகளில் மெய்நிகர் ஆய்வகம் (AR/VR Lab) அமைத்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 101 |
| 63 | வருவாய் பிரிவு – வடக்கு மண்டலம் – 8 வழிபாட்டுத் தளங்களுக்கு புதிய குடிநீர் வழங்குதல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 103 |
| 64 | பொறியியல் பிரிவு - ஐந்து மண்டலம் - குடிநீர் விநியோக வாகனம் கொள்முதல் செய்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 104 |
| 65 | பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம் –4 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 107 |
| 66 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் – 9 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 108 |
| 67 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் – 6 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 111 |
| 68 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் – 2 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 116 |
| 69 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் – 3 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 117 |
| 70 | பொறியியல் பிரிவு – தெற்கு மண்டலம் -10 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 118 |
| 71 | பொறியியல் பிரிவு – தெற்கு மண்டலம் - 5 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 123 |
| 72 | பொறியியல் பிரிவு – தெற்கு மண்டலம் - 4 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 126 |
| 73 | பொறியியல் பிரிவு – தெற்கு மண்டலம் - 16 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 127 |
| 74 | பொறியியல் பிரிவு – வடக்கு மண்டலம் - 13 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 134 |
| 75 | பொறியியல் பிரிவு – மேற்கு மண்டலம் - 2 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 137 |
| 76 | பொறியியல் பிரிவு – வடக்கு மண்டலம் - 13 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 139 |
| 77 | பொறியியல் பிரிவு – வடக்கு மண்டலம் - 3 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 143 |

| | | |
|---|---|---|
| 78 | பொறியியல் பிரிவு – மேற்கு மண்டலம் - 3 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 145 |
| 79 | பொறியியல் பிரிவு – மேற்கு மண்டலம் - 17 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 145 |
| 80 | பொறியியல் பிரிவு – மேற்கு மண்டலம் - 10 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 151 |
| 81 | பொறியியல் பிரிவு – மேற்கு மண்டலம் - 12 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 154 |
| 82 | பொறியியல் பிரிவு – மேற்கு மண்டலம் - வார்டு எண்.73-க்குட்பட்ட ராமகிருஷ்ணாபுரம் பகுதியில் பாதாள சாக்கடை குழாய் பதித்தல்– ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 157 |
| 83 | பொறியியல் பிரிவு – மேற்கு மண்டலம் - 18 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 158 |
| 84 | பொறியியல் பிரிவு – மத்திய மண்டலம் - 12 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 163 |
| 85 | பொறியியல் பிரிவு – மத்திய மண்டலம் - 9 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 167 |
| 86 | பொறியியல் பிரிவு – மத்திய மண்டலம் - 3 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 170 |
| 87 | பொறியியல் பிரிவு – மத்திய மண்டலம் - 10 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 172 |
| 88 | பொறியியல் பிரிவு – வடக்கு மண்டலம் - 10 அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 175 |
| 89 | பொறியியல் பிரிவு –ஐந்து மண்டலம்- பொது கழிப்பிடங்கள் மற்றும் மாநகராட்சி பள்ளிகளை ஒரு வருடகாலத்திற்கு பராமரித்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 179 |
| 90 | பொறியியல் பிரிவு –ஐந்து மண்டலம்- 35 பூங்காக்களை பராமரித்தல்- ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 182 |
| 91 | பொறியியல் பிரிவு –மேற்கு, வடக்கு மற்றும் மத்திய மண்டலம்- 21 பூங்காக்களை பராமரித்தல்- ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 193 |
| 92 | பொறியியல் பிரிவு –ஐந்து மண்டலம்- தெருவிளக்குகளை மாற்றி அமைப்பதற்கு தேவையான (20W, 40W, 70W, 90W, 120W, 150W) தெருவிளக்குகள் வழங்குதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | 206 |
| 93 | ஸ்மார்ட் சிட்டி பிரிவு (பொறியியல் பிரிவு) – தெற்கு மண்டலம் – வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் 184 எண்ணிக்கையிலான தொட்டிகளை கொண்ட மண்புழு உரம் தயாரிக்கும் மையத்தினை இயக்கி பராமரித்தல் பணிக்கு 3 மாத கால நீட்டிப்பு செய்தல் – மாமன்றத்தின் பின்னேற்பு கோருதல் – தொடர்பாக. | 211 |
| 94 | ஸ்மார்ட் சிட்டி பிரிவு (பொறியியல் பிரிவு) – தெற்கு மண்டலம் – வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் மண்புழு உரம் தயாரிக்கும் மையத்தை இயக்கி பராமரித்தமைக்காக நிலுவைத் தொகை மற்றும் எஞ்சிய கால நீட்டிப்புக்கான தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மாமன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக. | 212 |

ஆ)

**திருக்குறள்**

தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்தது
உண்ணலி னுாங்கினியது இல்.

குறள் - 1065

**விளக்கம்**

தம் உழைப்பினால் முயன்று பெற்றது நீர்தெளிந்த கூழ்தான் என்றாலும், அதனை உண்பதைவிட ஊக்கமும், இன்பமும் தருவது வேறு இல்லை. இரவை நாடாது இயன்ற அளவு உழைத்து உண்ணவேண்டும்.

திருவள்ளுவர்.

---

இ) **தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி. தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு. எவ்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**பொருள் எண் 1**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் இணைக்கப்பட்ட பகுதிகளான வடவள்ளி. வீரகேரளம். கவுண்டம்பாளையம் மற்றும் துடியலூர் பகுதிகளுக்கு பாதாளசாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்கு அரசாணை எண். 25. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC2) நாள்.29.01.2021 வாயிலாக ரூ.860.80 கோடிக்கு நிர்வாக அனுமதி அளித்தன்பேரில், விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், சென்னை மூலம் ஆசிய வளர்ச்சி வங்கிக்கு பரிந்துரைக்குப்பட்டதில், விரிவான மதிப்பாய்வு செய்யப்பட்ட பின்னர் விலை ஏற்றத்தின் காரணமாக ஆசிய வளர்ச்சி வங்கியின் விதிமுறைகளின் படி திருத்திய திட்ட மதிப்பீடு ரூ.922.16 கோடிக்கு நிர்வாக அனுமதி அரசாணை நிலை எண்.104, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) நாள்.21.07.2023 வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையின் படி இத்திட்டத்திற்கான மொத்த தொகை ரூ.922.16 கோடியில் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதிசேவை கழகம் சென்னை மூலம் கடன் தொகை ரூ.184.40 கோடியினை TNUDF ஆசிய வளர்ச்சி வங்கியின் கீழ் நிதியுதவியுடன் (ADB assisted TNUFIP- T3) பெறுவதற்கு முதன்மைச் செயலாளர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதிசேவை கழகம், கடிதம் எண்.TNUDF/Projects/Coimbatore UGSS 4 added areas நாள்.27.07.2023 மூலம் கடன் ஒப்புதல் வழங்கியுள்ளது.

அதனை தொடர்ந்து, TNUIFSL நிதி உதவி மூலம் TNUDF-லிருந்து (ADB assisted Tamil Nadu Urban Flagship Investment Program TNUFIP - Tranche 3) கடன் பெறுவதற்கான ஒப்பந்த பத்திரத்தில் உள்ள நிபந்தனைகளை ஏற்கவும் மேலும் Tripartite Agreement-ல் ஆணையாளர் அவர்கள் கையொப்பமிட்டு அனுப்பிவைப்பதற்கும் மாமன்றத்தில் 31.08.2023-ம் தேதியன்று (தீர்மான எண்.196) ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட ரூ.184.40 கோடி கடனில், இதுவரை பெறப்படாத மீதமுள்ள ரூ.80.39 கோடி தொகையைப் பெறுவதற்கான காலம் 30.08.2026 அன்று முடிவடைகிறது. பணிகள் இன்னும் முடிவடையாத நிலையில், குறித்த மீதமுள்ள கடனைப் பெறுவதற்கான காலத்தை 31.12.2026 வரை நீட்டித்து, கடன் பெறுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: அனுமதிக்கலாம். **ந.க.எண்**.836/2023/**ப.வ**.(**எம்**)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 677 நாள் 13.10.2026**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 2**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் இணைக்கப்பட்ட பகுதிகளான வடவள்ளி வீரகேரளம் கவுண்டம்பாளையம் மற்றும் துடியலூர் பகுதிகளுக்கு பாதாளசாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்கு அரசாணை எண். 25. நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC2) நாள்.29.01.2021 வாயிலாக ரூ.860.80 கோடிக்கு நிர்வாக அனுமதி அளித்துள்ளதன்பேரில், விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், சென்னை மூலம் ஆசிய வளர்ச்சி வங்கிக்கு பரிந்துரைக்குப்பட்டதில், விரிவான மதிப்பாய்வு செய்யப்பட்ட பின்னர் விலை ஏற்றத்தின் காரணமாக ஆசிய வளர்ச்சி வங்கியின் விதிமுறைகள் படி ரூ.922.16 கோடிக்கு திட்ட மதிப்பீடு திருத்தப்பட்டு, அதற்கான நிர்வாக அனுமதி அரசாணை நிலை எண்.104, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) நாள்.21.07.2023 வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையின்படி இத்திட்டத்திற்கான மொத்த தொகை ரூ.922.16 கோடியில் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதிசேவை கழகம் சென்னை மூலம் மானியத் தொகை ரூ.645.54 கோடியினை PSGF ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் (ADB assisted TNUFIP-T3) பெறுவதற்கு முதன்மைச் செயலாளர் மற்றும் நிர்வாக இயக்குநர் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதிசேவை கழகம், கடிதம் எண்.PSGF/Projects/Coimbatore UGSS 4 added areas நாள்.27.07.2023 மூலம் மானியம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

அதனை தொடர்ந்து, TNUIFSL நிதி உதவி மூலம் PSGF-லிருந்து (ADB assisted - Project Sustainability Grant Fund (PSGF) - Tranche 3) மானியம் பெறுவதற்கு மாமன்றத்தில் 31.08.2023-ம் தேதியன்று (தீர்மான எண்.197) ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட மானியத் தொகை ரூ.645.54 கோடியில் இதுவரை பெறப்படாத மீதமுள்ள ரூ.281.50 கோடி தொகையைப் பெறுவதற்கான காலம் 30.08.2026 அன்று முடிவடைகிறது. பணிகள் இன்னும் முடிவடையாத நிலையில், குறித்த மீதமுள்ள மானியத்தை பெறுவதற்கான காலத்தை 31.12.2026 வரை நீட்டித்து, மானியம் பெறுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: அனுமதிக்கலாம். **ந.க.எண்**.836/2023/**ப.வ.(எம்)**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 678 நாள் 13.10.2026**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 3**

**பார்வை**: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களின் ஆய்வு நாள் 9.9.2026

கோயம்புத்தூர் மாநகராட்சி/ வடக்கு மண்டலம் வார்டு எண்.19 – பாலமுருகன் நகர் மற்றும் வார்டு எண்.30 – கணேஷ் லேஅவுட் பிரதான சாலை ஆகிய பகுதிகளில் உள்ள கால்வாய் ஓரங்களில் மண் அரிப்பு மற்றும் கரை சேதம் ஏற்படும் நிலை காணப்படுகிறது. மேலும் கால்வாய் கரைகள் பாதுகாப்பின்றி இருப்பதால் சாலையின் பயன்பாட்டு அகலம் குறைந்து வாகனப் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவதுடன் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு விபத்து ஏற்படும் வாய்ப்பும் உள்ளது.

எனவே கால்வாய் கரைகளை நிலைப்படுத்தி பாதுகாக்கவும் சாலை அகலம் குறைவதைத் தடுக்கவும் போக்குவரத்து இடையூறுகளை தவிர்க்கவும் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் மேற்கண்ட பகுதிகளில் தேவையான அளவில் கால்வாய் ஓர தடுப்புச்சுவர் (Channel Side Retaining Wall) அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது இப்பணிக்கு கீழ்கண்டவாறு மதிப்பீடு தொகை தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வடக்கு மண்டலம் -பொறியியல் பிரிவு -வார்டு எண் 19 & 30 க்குட்பட்ட பாலமுருகன் நகர் முதல் கணேஷ் லே அவுட் வரை உள்ள கால்வாய்க்கு தடுப்புச்சுவர் கட்டுதல்<br><br>ந.க.எண். 5291/2026/எம்டி | 150.00 |
| | மொத்தம் | ரூ.150.00 |

மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 150.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண். 5291 /2026/எம்டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 679 நாள் 13.10.2026**

ஒத்திவைக்கப்பட்டது

**பொருள் எண் 4**

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் பொறியியல் பிரிவு வார்டு எண் 19 க்குட்பட்ட மணியகாரன்பாளையம் பிரதான சாலையில் பூசாரிபாளையம் முதல் சுவாக தேவ் சந்திப்பு வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் திரும்ப கட்டுதல் பணிக்கு கீழ்கண்டவாறு மதிப்பீடு தொகை தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வடக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு - வார்டு எண் – 19 க்குட்பட்ட மணியகாரன்பாளையம் பிரதான சாலையில் பூசாரிபாளையம் முதல் சுவாக தேவ் சந்திப்பு வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் திரும்ப கட்டுதல்<br>ந.க.எண். 5293/2026/எம்டி | 46.00 |
| | **மொத்தம்** | **ரூ.46.00** |

மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 46.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண். 5293 /2026/எம்டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 680 நாள் 13.10.2026**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 5**

கோயம்புத்தூர் மாவட்டம், கோவை வடக்கு வட்டம், மேற்கு மண்டலம், தெலுங்குபாளையம் கிராமம், புல எண்கள் 16/49 to 16/57 மற்றும் 16/60 to 16/64 வரையுள்ள சீரநாயக்கன்பாளையம் பகுதியில் அமைந்துள்ள 102 குடியிருப்பு கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகளை தகர்த்து விட்டு மறுகட்டுமானம் செய்யவும், மொத்தம் உள்ள 3.18 ஏக்கர் பரப்பளவில் 102 அடுக்குமாடி குடியிருப்புகள் ஆனது நகர் ஊரமைப்பு இயக்குநரிடம் கடந்த 13.06.1985 – அன்று தேதியிட்ட LP/R(CPN) No. எண். 79/85 மூலம் 1985 ஆம் ஆண்டு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் மேற்படி அடுக்குமாடி குடியிருப்புகள் மிகவும் சிதிலமடைந்து, குடியிருக்க தகுதியற்று, அபாயகரமான நிலையில் உள்ளதால், மேற்படி அடுக்குமாடி குடியிருப்பு திட்டத்திலுள்ள தற்போதைய உரிமையாளர்களால் ஏற்படுத்தப்பட்ட 3 ஸ்டார் அடுக்குமாடி குடியிருப்போர் நல சங்கம் மற்றும் தனியார் கட்டுமான நிறுவனத்துடன் இணைந்து குடியிருப்புகளை இடித்து அகற்றி மறு கட்டுமானம் மேற்கொள்ள அனுமதி கோரப்பட்டுள்ளது.

இந்நிலையில், நிலையிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்தில் கவரப்பட்ட மொத்த இடமான 3.18 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் சாலைகள் மற்றும் பூங்கா போன்ற பகுதிகளுக்கு ஒப்படைக்கப்பட்ட 1.18 ஏக்கர் இடத்தை செயற்பொறியாளர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அவர்களின் கடித எண். PLG/1512/2025, நாள்:23.01.2026-ன் படி பராமரிப்பிற்காக கோயம்புத்தூர் மாநகராட்சியிடம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டப்பகுதியில் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகள் மற்றும் பூங்கா போன்ற பொது பகுதிகள் வருவாய்த்துறை நிலஆவணங்களின்படி சர்க்கார் புறம்போக்கு நிலமாக (கோயம்புத்தூர் மாநகராட்சி) வகைப்படுத்தப்பட்டுள்ளது, நகரளவை ஆவணங்களின் படி உள்ள பொது ஒதுக்கீடு மற்றும் சாலைகளின் விபரம் பின்வருமாறு:

**i. நகரளவை ஆவணங்களின் படி உள்ள பொது ஒதுக்கீடு மற்றும் சாலைகளின் விவரம்**

| வ.எண் | டி.எஸ் எண் | பரப்பு (சதுர மீட்டர்) |
|---|---|---|
| 1 | 16/49 | 887.00 |
| 2 | 16/51 | 1079.00 |
| 3 | 16/52 | 725.00 |
| 4 | 16/53 | 1416.00 |
| 5 | 16/54 | 38.00 |
| 6 | 16/55 | 7.00 |
| 7 | 16/56 | 199.00 |
| 8 | 16/57 | 854.00 |
| 9 | 16/60 | 803.00 |
| 10 | 16/61 | 825.00 |

| | | |
|---|---|---|
| 11 | 16/62 | 3401.00 |
| 12 | 16/63 | 349.00 |
| 13 | 16/64 | 2472.00 |
| **மொத்தம்** | | **13055.00 சதுர மீட்டர்** |

தற்போது **"சீரநாயக்கன்பாளையம் வீட்டு வசதி வாரிய வீட்டு உரிமையாளர்கள் ஒருங்கிணைந்த மறுகட்டமைப்பிற்கான கூட்டு நடவடிக்கை குழு"** (3 ஸ்டார் அடுக்குமாடி குடியிருப்போர் நல சங்கம்) மற்றும் தனியார் கட்டுமான நிறுவனம் இணைந்து தற்போதைய தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி (ம) கட்டட விதிகள்-2019 இன் படி மேற்படி சிதலமடைந்த 102 குடியிருப்புடன் கூடிய ஒருங்கிணைந்த குடியிருப்பு வளாகமாக மறுக்கட்டுமானம் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி 102 குடியிருப்பு கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்திற்கான நிலையிலுள்ள சாலைகள் மற்றும் பூங்கா போன்ற பொது ஒதுக்கீடு பகுதிகளை மாற்றியமைத்தால் மட்டுமே ஒருங்கிணைந்த குடியிருப்பு வளாகமாக மறுகட்டுமானம் மேற்கொள்ள இயலும் என்பதால் திட்ட அனுமதி பெற்ற பின்னர் மேலே அட்டவணையில் குறிப்பிட்ட சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகள் பரப்பளவு எதுவும் மாறாமல் அரசின் அனுமதி பெற்று நகர் ஊரமைப்பு இயக்கத்திடம் மறுக்கட்டுமானத்திற்கான திட்ட அனுமதி பெறுவதற்காக கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு,

1. நகரளவை பதிவேடுகளின் படி ஏற்கனவே ஒப்படைத்த சாலை (ம) பூங்கா பரப்புகளை அளவு மாறாமல் மீண்டும் ஒப்படைப்பு செய்யவும்,
2. தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யவும் வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்திடவும், பழைய ஒப்படைப்பு பத்திரத்தை ரத்து செய்யவும்,
3. நகர் ஊரமைப்பு இயக்கத்திற்கு மறுகட்டுமானத்திற்கு திட்ட அனுமதி பெற மாநகராட்சியின் தடையின்மை சான்று வழங்கவும்,
4. அரசின் அனுமதி பெற நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் வழியாக, கடிதம் அனுப்பி வைக்கவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதி வழங்கலாம். ந.க. எண்.2005/2026/எம்.எச்.1/மே

**மாநகர மன்ற தீர்மானம் எண் 681 நாள் 13.10.2026**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 6**

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி - பொது சுகாதாரப்பிரிவு – கோவிட் 19 பெருந்தொற்று காலத்தில் நவம்பர் 2021 மாதம் – 18868 RTPCR மாதிரிகள் (RTPCR Samples) Orbito Asia Diagnostics என்ற நிறுவனத்திற்கு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் அனுப்பப்பட்டது – பரிசோதனைக்கான தொகை வழங்க அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைப்பது– தொடர்பாக

பார்வை :-
1. மாவட்ட சுகாதார அலுவலர், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் நாள்.27.08.2026.
2. Orbito Asia Diagnostics. Coimbatore அவர்களின் (மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு முகவரியிட்ட) கடித நாள். 11.03.2026 (ம) 16.05.2026
3. திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதார திட்டம் (TNHSP). சென்னை அவர்களின் கடிதம் Roc No.5439/TNHSP/Ins/2026 நாள்.20.02.2026.
4. Orbito Asia Diagnostics, Coimbatore அவர்களின் கடித நாள்.27.06.2026
5. ஆணையர் அவர்களின் அனுமதி நாள். 01.09.2026

---

பார்வை 1-ல் கண்டுள்ள மாவட்ட சுகாதார அலுவலர், கோயம்புத்தூர் அவர்களின் கடிதத்தில், கோவிட் 19 பெருந்தொற்று காலத்தில் கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து, நவம்பர் 2021 மாதத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு, Orbito Asia Diagnostics, Coimbatore என்ற நிறுவனத்திற்கு RTPCR பரிசோதனைக்காக, அனுப்பப்பட்ட 18868 மாதிரிகளுக்கான தொகை ரூ.75,47,200/- (18868 X 400) நாளது தேதிவரையில் பெறப்படவில்லை, என்பதை பார்வை 2-ல் காணும் கடிதத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பார்வை 3-ல் காணும் திட்ட இயக்குநர் TNHSP அவர்களின் கடிதத்தின்படி, நவம்பர் 2021 மற்றும் டிசம்பர் 2021 மாதத்திற்கான மாதிரிகளின் RTPCR பரிசோதனைக்கான நிலுவைகளுக்கு, அந்தந்த மாவட்ட நிர்வாகத்தை அணுகுமாறு Orbito Asia Diagnostics, Coimbatore நிறுவனத்தாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் மற்றும் இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு நவம்பர் 2021 மாதத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிக்குட்பட்ட நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து RTPCR பரிசோதனைக்கான 18868 மாதிரிகள் Orbito Asia Diagnostics, Coimbatore நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட விபரங்கள் Line List பெறப்பட்டுள்ளது.

மேலும் இதனை தொடர்ந்து, திட்ட இயக்குநர் தமிழ்நாடு சுகாதார திட்டம் TNHSP, சென்னை அவர்களின் வழிகாட்டுதலின்படியும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுறுத்தளின்படியும், மேற்கண்ட Orbito Asia Diagnostics, Coimbatore நிறுவனத்திற்கு RTPCR பரிசோதனைக்காக இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து அனுப்பப்பட்ட 18868 மாதிரிகளுக்கான தொகை ரூ.75,47,200/- (18868 X 400) மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இம்மாநகராட்சி நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து கோவிட் 19 பெருந்தொற்று காலத்தில் நவம்பர் 2021-ஆம் மாதத்தில் Orbito Asia Diagnostics நிறுவனத்திற்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்ட 18868 RTPCR மாதிரிகள் (RTPCR Samples) தொகை ரூ.75,47,200/- (18868 X 400) மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க பார்வை 5-ல் காணும் ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, மன்றத்தின் அனுமதி வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.5373/2026/ME4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 682 நாள் 13.10.2026**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 7**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 88-க்குட்பட்ட ஆழ்துளை கிணறுகள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கு நாள். 13.10.2025 அன்று நிர்வாக அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி நாள். 21.01.2026அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று மதிப்பீட்டை விட குறைவாக பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை இறுதி செய்து, மாமன்ற தீர்மான எண்:99 நாள். 11.02.2026 தொடர்ந்து தி/ள் எஸ்.எஸ் அசோசியேட்ஸ் அவர்களுக்கு நாள். 12.02.2026அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | பணி உத்தரவு நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | தெற்கு மண்டலம் வார்டு எண்.88-க்குட்பட்ட ஆழ்துளை கிணறு 10 மாதங்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி **ந.க.எண்.7188/2025/டி.1(தெ)** | 4.75 | 13.10.2025 | தி/ள் எஸ்,எஸ் அசோசியேட்ஸ் | 12.02.2026 |

ஒப்பந்ததாரர் தி/ள். எஸ்.எஸ் அசோசியேட்ஸ் நிறுவனத்திற்கு 12.02.2026 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு 12.02.2026 முதல் 13.07.2026 வரை பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் மாண்புமிகு மேயர் அவர்களின் மக்கள் குறை தீர்க்கும் முகாமில் மனு எண். 046 நாள்.01.09.2026 அன்று ஒப்பந்ததாரர் மூலம் வழங்கப்பட்ட மனுவில் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் மேற்கண்ட பணியினை தொடர்ந்து செய்வதற்கு இயலாது எனவும், மேற்கண்ட பணியினை இரத்து செய்திடவும் வேண்டி மனு வழங்கியுள்ளார்.

ஆகையால் ஒப்பந்ததாரர். தி/ள் எஸ்,எஸ் அசோசியேட்ஸ் மூலம் பணி மேற்கொள்ள இயலாத காரணத்தால் கோப்பினை 31.08.2026 அன்றுடன் இரத்து செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வரைவு ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்.7188/2025/ டி.1(தெ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 683, நாள் 13.10.2026**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 8**

கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு நாள்.07.07.2026--அன்று பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எ ண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| | **பொது நிதி** | | | | | |
| 1 | மத்திய மண்டலம் – வார்டு எண். 48-க்குட்பட்ட சக்தி சாலையில் அமைந்துள்ள சாஸ்திரி மயானத்திற்கான அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் **(ந.க.எண்.1319/2026/எம்.டி.5)** | 50.00 | மா.ம தீர்மான எண்.191 நாள் 26.02.26 | முதலாம் அழைப்பு 23.06.26 | 1).தி/ள். என் பி கே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 7.18% குறைவு<br>2).தி/ள்.ஸ்வாசிட் இன்ஜினியர்ஸ் மதிப்பீட்டை விட 11.64% குறைவு | தி/ள். ஸ்வாசிட் இன்ஜினியர்ஸ் மதிப்பீட்டை விட 11.64% குறைவு |
| 2 | மத்திய மண்டலம் – வார்டு எண். 48-க்குட்பட்ட தனலட்சுமி நகர் விரிவாக்கம் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் திரும்பக் கட்டுதல்.<br><br>**(ந.க.எண்.1311/2026/எம்.டி.5)** | 38.00 | மா.ம தீர்மான எண்.148 நாள் 26.02.26 | முதலாம் அழைப்பு 23.06.26 | 1). தி/ள்.குமரன் குடில் கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டை விட 4.97% அதிகம்<br>2). திரு.எம்.தண்டபாணி மதிப்பீட்டை விட 12.00% குறைவு<br>3). திருமதி எஸ்.ராஜாத்தி மதிப்பீட்டை விட 14.92% குறைவு<br>4). திள்.வி.எஸ்.டி கார்ப் மதிப்பீட்டை விட 12.05% குறைவு<br>5). தி/ள்.அபி அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 13.13% குறைவு | திருமதி. 'எஸ்.ராஜாத்தி மதிப்பீட்டைவிட 14.92% குறைவு |

| ஒப்பந்ததாரர் (L1) ஒப்பந்தப்புள்ளி விகிதம் | காப்புத் தொகையின் விபரம் |
|---|---|
| 5.01% முதல் 15.00% வரை குறைவு | மதிப்பீட்டு தொகையில் 2.00% கூடுதல் காப்புத்தொகை |
| 15.01% முதல் 20.00% வரை குறைவு | ஒப்பந்தப்புள்ளி விலைப்புள்ளி மற்றும் மதிப்பீட்டு விலை இடையேயான வித்தியாசத் தொகையில் 50% (ஐம்பது சதவீதம்) கூடுதல் காப்புத்தொகை |

மேற்காண் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காப்புத் தொகையினை 15 தினங்களுக்குள் செலுத்துமாறு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு அறிவிப்பு வழங்கவும். கூடுதல் காப்புத்தொகை செலுத்தப்பட்ட பின்னர் பணி ஆணை வழங்கவும், தவறும் பட்சத்தில் அவர்கள் செலுத்திய முன்வைப்பு (EMD) தொகையை விதிமுறைகளின்படி பறிமுதல் செய்து, அப்பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும், மேலும் காப்புத் தொகை செலுத்திய ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்தரவு வழங்கவும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:அனுமதிக்கலாம். ந.க.எண்.1319/2026/எம்டி5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 684, நாள் 13.10.2026**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண் 9**

கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு நாள்.07.07.2026--அன்று பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எ ண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| | **பொது நிதி** | | | | | |
| 1 | மத்திய மண்டலம், வார்டு எண் 63-ல் உள்ள இராமநாதபுரம் பகுதியிலுள்ள மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் திறந்தவெளி கலையரங்கம் அமைத்தல்<br><br>**(ந.க.எண்.1736/2026/எம்.டி.5)** | 40.00 | மா.ம தீர்மான எண்.261 நாள் 26.02.26 | முதலாம் அழைப்பு 23.06.26 | 1).திரு.கே. ராமசாமி மதிப்பீட்டை விட 11.29%குறைவு<br>2).தி/ள்.டி டி கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டை விட 12.68%குறைவு<br>3).தி/ள். ஏஆர் வி & கோ மதிப்பீட்டை விட 14.99%குறைவு<br>4).திருமதி.யு. பிரியா மதிப்பீட்டை விட 10.07%குறைவு<br>5).திரு.எம். பெருமாள் மதிப்பீட்டைவிட 14.05%குறைவு<br>6).தி./ள். என்.எம்எஸ் இன்ஜினியர்ஸ் மதிப்பீட்டை விட 2.89%குறைவு | தி/ள். ஏஆர் வி & கோ மதிப்பீட்டைவிட 14.99%குறைவு |
| 2 | மத்திய மண்டலம், வார்டு எண் 63-ல் உள்ள இராமகிருஷ்ணபுரம் பகுதியிலுள்ள மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் திறந்தவெளி அரங்கம் அமைத்தல்<br>**(ந.க.எண்.1737/2026/எம்.டி.5)** | 40.00 | மா.ம தீர்மான எண்.261 நாள் 26.02.26 | முதலாம் அழைப்பு 23.06.26 | 1).தி/ள்.கே. ராமசாமி மதிப்பீட்டைவிட 11.33%குறைவு<br>2).தி/ள். ஏஆர் வி & கோ மதிப்பீட்டை விட 14.99%குறைவு<br>3). தி./ள். என்.எம்எஸ் இன்ஜினியர்ஸ் மதிப்பீட்டை விட 2.57%குறைவு<br>4).திருமதி.யு. பிரியா மதிப்பீட்டைவிட 10.07%குறைவு<br>5).தி/ள்.டி டி கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டை விட 13.67%குறைவு | தி/ள். ஏஆர் வி & கோ மதிப்பீட்டை விட 14.99%குறைவு |

| ஒப்பந்ததாரர் (L1) ஒப்பந்தப்புள்ளி விகிதம் | காப்புத் தொகையின் விபரம் |
|---|---|
| 5.01% முதல் 15.00% வரை குறைவு | மதிப்பீட்டு தொகையில் 2.00% கூடுதல் காப்புத்தொகை |

மேற்காண் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காப்புத் தொகையினை 7 நாட்களுக்குள் செலுத்துமாறு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு அறிவிப்பு வழங்கவும். கூடுதல் காப்புத்தொகை செலுத்தப்பட்ட பின்னர் பணி ஆணை வழங்கவும், தவறும் பட்சத்தில் அவர்கள் செலுத்திய முன்வைப்பு (EMD) தொகையை விதிமுறைகளின்படி பறிமுதல் செய்து, அப்பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும், மேலும் காப்புத் தொகை செலுத்திய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கக்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:அனுமதிக்கலாம். ந.க.எண்.1736/2026/எம்டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 685, நாள் 13.10.2026**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 10**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 98 க்குட்பட்ட ஆழ்துளை கிணறுகள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கு நாள்.29.10.2025 அன்று நிர்வாக அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி நாள்.09.01.2026 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று மதிப்பீட்டை விட குறைவாக பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை இறுதி செய்து, மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி நாள். 20.01.2026 தொடர்ந்து தி/ள் எஸ்.எஸ் அசோசியேட்ஸ் அவர்களுக்கு நாள். 20.01.2026 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை(ரூ. இலட்சத்தில்) | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | பணி உத்தரவு நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | தெற்கு மண்டலம் வார்டு எண்.98-க்குட்பட்ட ஆழ்துளை கிணறு ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி **ந.க.எண்.6030/25/எம்.டி.4** | 10.70 | 29.10.2025 | தி/ள் எஸ்,எஸ் அசோசியேட்ஸ் | 20.01.2026 |

ஒப்பந்ததாரர் தி/ள் எஸ்,எஸ் அசோசியேட்ஸ் நிறுவனத்திற்கு 20.01.2026 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு 21.01.2026 முதல் 31.08.2026 வரை பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாண்புமிகு.மேயர் அவர்களின் மக்கள் குறை தீர்க்கும் முகாமில் மனு எண்.046 நாள்.01.09.2026 ஒப்பந்ததாரர் மூலம் வழங்கப்பட்ட மனுவில் ஒப்பந்ததாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் மேற்கண்ட பணியினை தொடர்ந்து செய்வதற்கு இயலாது எனவும், மேற்கண்ட பணியினை இரத்து செய்திடவும் வேண்டி மனு வழங்கியுள்ளார். ஆகையால் ஒப்பந்ததாரர். தி/ள் எஸ்,எஸ் அசோசியேட்ஸ் மூலம் பணி மேற்கொள்ள இயலாத காரணத்தால் கோப்பினை 01.09.2026 அன்றுடன் இப்பணிக்கான கோப்பினை இரத்து செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்.6030/2025/ எம்டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 686, நாள் 13.10.2026**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 11**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 94-க்குட்பட்ட ஆழ்துளை கிணறுகள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கு நாள்.29.10.2025 அன்று நிர்வாக அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி நாள்.21.01.2026 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று மதிப்பீட்டை விட குறைவாக பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை இறுதி செய்து, மாமன்ற தீர்மான எண்.99 நாள். 11.02.2026 தொடர்ந்து தி/ள் எஸ்.எஸ் அசோசியேட்ஸ் அவர்களுக்கு நாள். 12.02.2026 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை(ரூ. இலட்சத்தில்) | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | பணி உத்தரவு நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | தெற்கு மண்டலம் வார்டு எண்.94-க்குட்பட்ட ஆழ்துளை கிணறு ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி **ந.க.எண்.7459/2025/டி.1(தெ)** | 9.70 | 29.10.2025 | தி/ள் எஸ்,எஸ் அசோசியேட்ஸ் | 12.02.2026 |

ஒப்பந்ததாரர் தி/ள் எஸ்,எஸ் அசோசியேட்ஸ் நிறுவனத்திற்கு 12.02.2026 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு 12.02.2026 முதல் 31.08.2026 வரை பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாண்புமிகு.மேயர் அவர்களின் மக்கள் குறை தீர்க்கும் முகாமில் மனு எண்.046 நாள்.01.09.2026 ஒப்பந்ததாரர் மூலம் வழங்கப்பட்ட மனுவில் ஒப்பந்ததாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் மேற்கண்ட பணியினை தொடர்ந்து செய்வதற்கு இயலாது எனவும், மேற்கண்ட பணியினை இரத்து செய்திடவும் வேண்டி மனு வழங்கியுள்ளார். ஆகையால் ஒப்பந்ததாரர். தி/ள் எஸ்,எஸ் அசோசியேட்ஸ் மூலம் பணி மேற்கொள்ள இயலாத காரணத்தால் கோப்பினை 01.09.2026 அன்றுடன் இப்பணிக்கான கோப்பினை இரத்து செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண். 7459/2025/டி1.(தெ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 687, நாள் 13.10.2026**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 12**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு நாள்.13.08.2026 -ல் பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணியினை ஏற்க பரிந்துரை செய்துள்ளது

| வ எ ண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | தகுதிப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | தெற்கு மண்டலம் வார்டு எண்.76, 77, 78, 79, 85, 86, 87, 88, 89, 90, 91, 92, 93, 94, 95, 96, 97, 98, 99 மற்றும் 100 ஆகிய வார்டு பகுதிகளில் பழுதடைந்துள்ள தார்சாலைகளுக்கு தார்தளம் ஒட்டு போடுதல் பணி ந.க.எண். 3662/2026/எம்.டி.4 e39/23 | 50.00 | மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி நாள். 23.06.2026 | முதலாம் அழைப்பு 22.07.26 | 1).தி/ள்.ஸ்ரீ கோமதியம்மன் அன்ட் கம்பெனி பணி மதிப்பீட்டைவிட (-) 8.76% குறைவு<br>2).தி/ள்.எஸ்.கே.எம்.எஸ் .கன்ஸ்ட்ரக்சன்ஸ் பணி மதிப்பீட்டைவிட (-) 9.61% குறைவு<br>3).தி/ள்.விஷ்ணு இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் பணி மதிப்பீட்டைவிட (-) 18.65% குறைவு<br>4).தி/ள்.ஜெயலட்சுமி பில்டர்ஸ் பணி மதிப்பீட்டைவிட (-) 14.99% குறைவு<br>5).தி/ள்.எம்.எஸ். இன்ஜினீயர்ஸ் அன்ட் பில்டர்ஸ் பணி மதிப்பீட்டைவிட (-) 15.99% குறைவு<br>6).தி/ள்.எம்.ஜெ. இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் பணி மதிப்பீட்டைவிட (-) 15.00% குறைவு<br>7).தி/ள்.அபி அசோசியேட்ஸ் பணி மதிப்பீட்டைவிட 14.43 % குறைவு | தி/ள்.விஷ்ணு இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் பணி மதிப்பீட்டைவிட (-) 18.65% குறைவு |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிக்கு பெறப்பட்ட நிர்வாக அனுமதி, முன் அனுமதி பெறப்பட்டதற்கு பின்னேற்பு வேண்டியும், மேற்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகிதம் 15.01% முதல் 20.00% வரை மதிப்பீட்டை விட குறைவாக பெறப்பட்டுள்ளதால், சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்தப்புள்ளி விலைப்புள்ளி மற்றும் மதிப்பீட்டு விலைக்கு இடையேயான வித்தியாசத் தொகையில் 50% (ஐம்பது சதவீதம்) கூடுதல் காப்புத்தொகையினை 7 தினங்களில் செலுத்த அறிவிப்பு வழங்கவும், கூடுதல் காப்புத்தொகை செலுத்திய பின்பு பணிகளின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்கவும், தவறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் செலுத்திய முன்வைப்பு தொகையை பிடித்தம் செய்து, மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண். 3662/2026/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 688, நாள் 13.10.2026**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 13

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலம், குறிச்சி கிராமம், புல எண். 188/2 ல் அமைந்துள்ள இடம் வருவாய் ஆவணங்களில் சர்க்கார் புறம்போக்கு சாலை என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள 0.65.00 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட இடத்தில் 0.45.42 ஹெக்டேர் இடம் போக்குவரத்திற்கு இடையூறின்றி சிட்கோ நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதால், அந்த இடத்தை மேற்படி நிறுவனத்திற்கு வகைப்பாடு மாற்றம் செய்ய தடையில்லா சான்று கோரி வட்டாட்சியர் மதுக்கரை அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு வரப்பெற்ற கடிதம் பரிசீலிக்கப்பட்டது.

மேற்படி குறிச்சி கிராம புல எண். 188/2-ல் உள்ள 0.65.00 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட இடத்தில் 0.45.42 ஹெக்டேர் பரப்பளவு இடம் மேற்படி நிறுவன கட்டுப்பாட்டிலும், போக்குவரத்திற்கு எந்தவொரு இடையூறும் இன்றி இருப்பதாலும், அந்த இடம் போக்குவரத்திற்கு தேவையற்றதாக இருப்பதாலும், மேற்படி இடமானது வருவாய் ஆவணங்களில் அரசு புறம்போக்கு சாலை என பதிவாகி உள்ளதாலும், மேற்படி இடத்தை அரசு நிறுவனமான தமிழ்நாடு சிறு தொழில்கள் மேம்பாட்டு கழகத்திற்கு பட்டா மாறுதல் செய்ய மாநகராட்சிக்கு ஆட்சேபனை இல்லை என தடையின்மை சான்று வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மன்றம் முடிவு செய்யலாம். ந.க. எண்.2075/2026/எச்.1(தெ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 689, நாள் 13.10.2026**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 14

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலம், வெள்ளலூர் உரக்கிடங்கு வளாகத்தில், மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இருந்து சேகரிக்கப்படும் மக்கும் தன்மையுடைய கழிவுகளை செயலாக்குவதற்காக மண்புழு உரம் தயாரிப்பு நிலையம் (Vermicompost Plant) அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி மண்புழு உரம் தயாரிப்பு நிலையத்தில், பிரிக்கப்பட்ட மக்கும் கழிவுகளை மண்புழு உரமாக மாற்றுவதற்காக மொத்தம் 184 மண்புழு உரக்குழிகள் (Vermicompost Pits) அமைக்கப்பட்டுள்ளன. இந்நிலையம் மூலம் மக்கும் தன்மையுடைய நகராட்சி திடக்கழிவுகளை அறிவியல் முறையில் செயலாக்கி, முறையாக மேலாண்மை செய்ய முடியும்.

அதனடிப்படையில் கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

**மண்புழு உரம் மையம்**

| வ.எண் | மண்டலம் | வார்டுஎண் | இடம் | கொள்ளவு |
|---|---|---|---|---|
| 1. | தெற்கு | 99 | வெள்ளலூர் குப்பை கிடங்கு | 100 மெ. டன் |

மேற்காண் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள **184 எண்ணிக்கையில் தொட்டிகள்** கொண்ட மண்புழு உரம் மையம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதியும் இயக்குதல் மற்றும் பராமரிப்புப்பணிக்கான செலவீனத் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : அனுமதிக்கலாம். **ந.க.எண்.** 5460 /2026/ எம்டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 690, நாள் 13.10.2026**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 15**

